செய்தி வெளியீடு எண். 01-2019 நாள்: 01.09.2019

# விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (Group IV) போட்டி எழுத்துத் தேர்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

******

விழுப்புரம் அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளி, காமராஜ் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, இ.எஸ். பொறியியல் கல்லூரி, நாகர் பப்ளிக் பள்ளி ஆகிய பள்ளிகளில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் இன்று (01.09.2019) நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (Group IV) போட்டி எழுத்துத் தேர்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (Group IV) போட்டித் தேர்வு இன்று (01.09.2019) நடைபெற்றது. விழுப்புரம் மாவட்டத்தில் 74,913 விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 64,724 நபர்கள் தேர்வில் கலந்து கொண்டனர். 10,189 நபர்கள் தேர்வில் கலந்து கொள்ளவில்லை.

விழுப்புரம் மாவட்டத்தில் தேர்வில் கலந்துகொள்ளும், தேர்வர்களுக்கென போக்குவரத்து வசதி, மின்வசதி, பாதுகாப்பு வசதி, குடிநீர் வசதி என அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு, தேர்வு நல்ல முறையில் நடைபெற மாவட்ட நிர்வாகம் அனைத்து முன்னேற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜேந்திரன், விழுப்புரம் வட்டாட்சியர் திரு.பிரபு வெங்கடேஸ்வரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.